



Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 245

புதன்கிழமை
30 ஜூலை 2025

ஆடி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50




மாகாணசபைத் தேர்தல்

## சட்டச் சிக்கல்களுக்கு நாடாளுமன்றிடமே தீர்வு

தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 30**

**மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்ற சட்டச் சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாண முடியும். தேர்தல் முறையைத் தீர்மானித்தால் அதற்கேற்ப செயற்பட நாங்கள் தயாராகவே உள்ளோம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.**

15

## புதன்பொய்கை

### சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரிகள் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வை

யாழ்ப்பாணம், ஜூலை 30

செம்மணி மனிதப் புதைகுழியை சுவிட்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட் தலைமையிலான குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர்.

15




யாழ்ப்பாணம், ஜூலை 30

அரியாலை - செம்மணி மனிதப்புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது மேலும் ஏழு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதையடுத்து செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 111ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான இரண்

15



### நல்லூர் ஆலய வளாகத்தில் அத்துமீறிய இராணுவத்தினர்!

பொதுமக்கள் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலய வளாகத்தில் இராணுவத்தினர் அத்துமீறி உள்நுழைந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

15

### கட்டுடையில் வாள்வெட்டு; ஒருவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்

15

### நீர்வேலியில் 103வயது மூதாட்டி சாவு

யாழ்., ஜூலை 30

நீர்வேலிப் பிரதேசத்தில் 103 வயது மூதாட்டி ஒருவர் நேற்று இயற்கை

15

செம்மணி மனிதப்புதைகுழி

### ஜயவர்த்தனபுர பல்கலையின் ஸ்கானரைப் பெறத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

செம்மணிப் புதைகுழி மீதான ஸ்கான் நடவடிக்கைகளைத்துரிதப்படுத்தும் வகையில், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானரைப் பெறுவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியில், ஜி. பி. ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கை

15

### மணியந்தோட்டத்தில் ஒருவர் உயிரிழப்பு; சகோதரியால் விசாரணையில் குழப்பம்!

யாழ்., ஜூலை 30

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில், தனது சகோதரியுடன் வசித்துவந்த நபரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், சகோதரி வழங்கிய முன்பின் முரணான வாக்குமூலத்தால் குழப்பம்

15



### முச்சந்தி முரளி

'சாவகச்சேரிக்கும் தங்கத்துக்கும் ஏதோ நெருங்கின உறவிருக்கு கண்டியளோ'

இளைஞர் மர்மக் கொலை

### ஒரு வருடம் கடந்தும் நிலைநாட்டப்படாத நீதி

மல்லாவியில் மக்கள் போர்

முல்லைத்தீவு, ஜூலை 30

கனடா செல்வதற்குத்தயாரான நிலையில், 2024ஆம் ஆண்டு வருடம் ஜூலை மாதம் 29ஆம் திகதி காணாமற்போய் மறுநாள் சடலமாக மீட்கப்பட்ட, மல்லாவி யோகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசன் சஜீவன் என்ற இளைஞருக்கு நீதிகோரி

15






### கோப்பாயில் விபத்து 7 பேருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று தனியார் பேருந்தொன்றும், சொகுசு வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு

15

### ரிக்ரொக் காதலனுக்காக நகைகள் திருடிய காதலி!

பல புதிய தகவல்கள் பட்சியில்

### 'ரிக்ரொக்' காதலனுக்காக நகை திருட்டு! யுவதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'ரிக் ரொக்' பிரபலங்களில் ஒருவரான தனது காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுப்பதற்காக நகைகளைத் திருடிய யுவதி,

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 | திகதி 29.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4147 | சீட்டிழுப்பு இலக்கம் 1214 | சீட்டிழுப்பு இலக்கம் 0173 | சீட்டிழுப்பு இலக்கம் 2253 | சீட்டிழுப்பு இலக்கம் 5905 | சீட்டிழுப்பு இலக்கம் 1935 | சீட்டிழுப்பு இலக்கம் 0480 | சீட்டிழுப்பு இலக்கம் 0021 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 09 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 11 69 71 73 | வெற்றி இலக்கங்கள் 06 17 18 55 | வெற்றி இலக்கங்கள் 7 8 1 8 | வெற்றி இலக்கங்கள் 01 02 22 72 | வெற்றி இலக்கங்கள் 6 6 5 6 8 2 | வெற்றி இலக்கங்கள் 14 41 42 58 | வெற்றி இலக்கங்கள் 5 6 8 2 | வெற்றி இலக்கங்கள் 05 08 27 51 |
| விசேட எழுத்து Z | | | | | விசேட எழுத்து J | | |

# புதைகுழிகளின் உண்மையை வெளிப்படுத்தவேண்டும் அரசு

## எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஜூலை 30**
**உண்மைகளை மூடிமறைத்து இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியாது. அதனால் புதைகுழிகள் தொடர்பான உண்மைகளை அரசாங்கம் கண்டறிந்து வெளிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

செம்மணிப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இங்கு நடைபெறும் அகழ்வுப் பணிகளில் குழந்தைகள், வயது குறைந்தவர்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. எலும்புக்கூடுகள் அசாதாரணமாக சூழலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

மனித புதைகுழிகள் கொக்குத்தொடுவாய், மன்னார், மாத்தளை தெற்கிலும் சில இடங்களில் அடையாளங்காணப்பட்டிருந்தன. புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளபோதும், அவை தொடர்பில் ஆய்வுசெய்யக்கூடிய பொறிமுறைகள் இலங்கையில் இன்னமும் இல்லை. ஆகையால் சர்வதேச நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளை முறையாகப் பாதுகாப்பதற்குக்கூட சர்வதேசநிபுணத்துவ மேற்பார்வை வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

புதைகுழிகள் தொடர்பிலான உண்மைகளைக் கண்டறிய சர்வதேச நிபுணர்களை நாட்டுக்கு அழைத்து, அவர்களிடம் புதைகுழி விவகாரங்களைக் கையளித்து, எவ்வித தலையீடுகளும் இன்றி அவர்கள் சுயாதீனமாகச் செயற்பட்டு அதுதொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-20)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0613 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 1 5 1 2 5 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2879 | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 05 17 30 67 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 08 13 23 60 | வெற்றி வாரம் 5040 |

| SASIRI | |
|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0736 | வெற்றி இலக்கம் 23 25 36 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் 01 15 38 49 | சீட்டிழுப்பு வாரம் 4591 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து C | சுப்பர் இலக்கம் 07 | வெற்றி இலக்கம் 06 14 15 48 | வெற்றி வாரம் 2055 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 29.07.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 20 21 41 53 | வெற்றி வாரம் 2705 |

# அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்சவாம்

கொழும்பு, ஜூலை 30

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவே இலங்கையின் அடுத்த ஜனாதிபதியென்பதை புலனாய்வுப் பிரிவு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாமல்தான் அடுத்த ஜனாதிபதியென்பது தற்போதைய ஆட்சியாளர்களுக்குத் தெரியும். புலனாய்வுப் பிரிவுகள் இது தொடர்பில் அனைத்து அறிக்கைகளையும் கையளித்துள்ளன.

தெற்காசியாவில் உருவாகும் இளம் தலைவராக நாமல் இருப்பார். வெளிநாடுகள் எம்முடன் பேச்சு நடத்துகின்றன. தூதரகங்களுக்கு சென்றால்கூட அடுத்த தலைவர் என்றே நாமலை விளிக்கின்றனர் -என்றார். (எ-44)

# மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிக்கின்றது அரசு!

## தயாசிறி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 30

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் பதவிக் காலத்தை நிறைவுசெய்தவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது. மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கம் படுதோல்வியடையும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ளனர். இருப்பினும் அந்தப் பிரேரணைகள் தொடர்பில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றார். (எ-இ)

# பாதாளக் குழுக்களுடன் அரசாங்கத்துக்கு 'டீல்'

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்காலத்தில் மக்கள் போராட்டம் உருவாகும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அதை முடக்குவதற்கு பாதாள உலகக் குழுக்களின் உதவி தேவை. அதனால்தான் அவர்களின் செயற்பாடுகளை அனுமதித்துவிட்டு அரசாங்கம் வேடிக்கை பார்க்கின்றது என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை இன்னும் வெளியிடாமல் மறைத்து வைத்திருப்பது பாரதூரமான செயலாகும்.

நாட்டில் பிரஜைகளின் இந்த அடிப்படை உரிமை இப்போது இல்லாமல் போயுள்ளது. அதற்குக் காரணம் பாதாள குழுக்களின் செயற்பாடுகள் இந்த ஆட்சியில் அதிகரித்துள்ளமைதான்.

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் பாதாளக் குழுக்கள் முடக்கப்பட்டிருந்தன. அநுரவின் ஆட்சியில் அவை தீவிரமாகச் செயற்படுகின்றன- என்றார். (எ-75)




# துமிந்த விடுதலை

கொழும்பு, ஜூலை 30

தங்கமுலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கி தொடர்பான விசாரணையில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவை விடுதலை செய்ய கல்கிசை நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

இந்த வழக்கில் நேரடி மற்றும் சூழ்நிலை ஆதாரங்கள் இல்லாததால் அவர் விடுதலை செய்யப்படுகிறார் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நல்லைக்கந்தன் ஆலய கொடியேற்றத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30
வரலாற்றுச் சிறப்புமிக்க 'அலங்காரக் கந்தன்' என அடியவர்களால் போற்றப்படுகின்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் கொடியேற்றத் திருவிழா சைவமக்களின் புனிதமான ஆடிச் செவ்வாய் விரத நாளான நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பல ஆயிரக் கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது.
கருவறையில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் வேற்பெருமானுக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வேற்பெருமான், வள்ளி தெய்வ நாயகியர், விநாயகப் பெருமான் ஆகிய முத் தெய்வங்களுக்கும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.
தொடர்ந்து கொடித்தம்பப் பூசை வழிபாடுகள் ஆரம்பமானது. முத் தெய்வங்களும் கொடித்தம்பத்தடியை வந்தடைந்ததைத் தொடர்ந்து கொடித்தம்பத்தடியில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து கொடித்தம்பத்தடியைச் சூழ நின்று அந்தண சிவாச்சாரியர்கள் வேதபாராயணம் ஓத, மேளதாள வாத்தியங்கள் முழங்க, ஆலயத்தின் காண்டா மணிகள் ஒருங்கே ஓங்கி ஒலிக்க சரியாக முற்பகல்10 மணியளவில் அலங்காரக் கந்தன் நல்லைக் கந்தன் கொடியேறி அருள்பாலித்தார்.
தொடர்ந்து வேற்பெருமான் தங்க மயிலிலும், வள்ளி தெய்வநாயகியர் அன்னப்பட்சி வாகனத்திலும், விநாயகப் பெருமான் மூஷிக வாகனத்திலும் உள்வீதி உலாவரும் திருக்காட்சி நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் நிறைவு பெற்றது. (ச-66-27)



கோப்பாய் மத்தி மகா மாரியம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன் தினம் ஆடிப்பூர நன்நாளில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-17)




நீர்வேலி வாய்க்கால்தரவை விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-17)

## நல்லூர்க்கந்தன் மஹோற்சவகால ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஜூலை 30
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக அருளுரை இன்று புதன்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெறவுள்ளது.
இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "எனை ஆண்ட இடம்" எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ச-66)





வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத் திருவிழாவின் பூங்காவனத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-41-66)



## நல்லூரான் சிறப்பம்சம்

### பதம்
**(தலைவி தோழிக்குச் சொல்லியது)**

பல்லவி:
நாத நாமக் கிரியை நாவில் சூட்டுவேன் நல்லை
நாதன் நாமம் ஓதிப் பிறவி ஓட்டுவேன் தோழி... (நாத நாம)

அனுபல்லவி:
ஓதி ஓதி ஒழிந்த நாளும் உணர்கிலான் எனைச்
சோதியாது சோதி ஆக்கும் உணர்விலான் தோழி...
(நாத நாம)

சரணம் 1:
வாடி வாடிக் கூடு போல ஆகினேன் வள்ளல்
வரவு இன்றிக் கூடு போக்கும் வகையிலேன்
ஆடு(ம்) மயிலும் அகவலின்றிப் போனதே! விழி
ஆறும் பொங்கி ஒளியும் தேய்வு ஆனதே!

சரணம் 2:
வள்ளியோடும் வலையெறிந்து போனவன் வலம்
வந்து வந்தும் நொந்து நொந்தும் வரவிலை!
அள்ளி அள்ளிக் கட்டிவைத்த ஆசையும் அவன்
அணையவில்லை என அழிந்து போகுமோ!

சரணம் 3:
பாடிப் பாடித் தேரடியில் பணிகிறேன் பதம்
பாடல் இன்றி வேறு ஒன்றும் பறைகிலேன்
கூடும் ஆசை குவியக் குணமும் அழியுமோ! குமரன்
குறித்த வரவுக் குறியும் வெற்றி பொழியுமோ!

**செ. சுதர்சன்**

### கொடிய வினை களைய கொடியேறிடுவீர்

நல்லை நகர் நாதனுக்குக் கொடியேற்றம்
நமக்கெல்லாம் அது கொண்டாட்டம்
நானிலமெங்கும் போராட்டம்
நாவினில் என்றும் புகழாரம்

செவ்வேல் ஏந்திய செந்தூரன்
செம்மணி பக்கமும் கொஞ்சம் பாரப்பா
செங்கதிர் எமை சுட்டெரித்தாலும்
சேர்ந்திடுவோம் உம் சந்நிதியில்

பக்திப் பரவசத்துடன் பல பேர்
பார்ப்பவரைக் கவர சில பேர்
அங்கப் பிரதிஷ்டையுடன் கனபேர்
பஜனைப் பாடல்களுடன் பக்தர்கள் பல பேர்

கொடிய வினை களைய கொடியேறிடுவீர்
கொடுமைகள் பல களைய கொடியேறிடுவீர்
கொடுந்துயர் களைய கொடியேறிடுவீர்
கோபுர தரிசனம் காண கொடியேறிடுவீர்

**க.தர்ஷ்சினி**

### நல்லூரான் பாமாலை

நாலாதேசமும் நான்மறை வேதங்கள் ஒலித்திடவே
நல்லூர்க்கந்தனின் கொடியேற்பும்
தேவர்கள் பூமாரி பொழிந்திடவும்
பக்தர்கள் பாடிப் பணிந்திடவும்
வள்ளி குஞ்சரி மணாளனின் கொடியேற்பும்
பாரினில் பாவங்கள் பறந்திடவும்
அடியவர் அகம்பாவம் அகன்றிடவும்
நல்லை வேலா அருள் செய்திடப்பா
நல்லைப் பதியுறை அலங்காரனே
உலகம் செழித்திட அருள் செய்திடப்பா நின்
பாதம் பாடிப் பணிந்து நின்றோம்
எம் வினைகள் யாவும் அழித்திடப்பா
சேவல் கொடியோன் மஞ்சுதனில்
மலரடி பணிந்தேத்துகின்றேம்

**சி.மகாலட்சுமி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமை அவசியம். செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் நன்றாக யோசித்து இறங்கவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். பிள்ளைகளால் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆலோசனை பயன்தருவதாக இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.




## தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் வைபவத்திலே அரச சேவைகள் துறையில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தேசிய லொத்தர் சபை

62 வருட கால பெருமையை அதே வழியிலே நிரூபித்து சமூக நலன் அரச சேவையை கொண்டுசெல்வதில் பங்களிப்பதுபோல் நாட்டின் நாலாபக்கமும் லொத்தர் வெற்றியாளர்களை உருவாக்கி மாபெரும் அரச மற்றும் தேசிய பணிக்கு பங்களிப்புச் செய்த தேசிய லொத்தர் சபையானது நம்பிக்கையை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தி இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் வைபவத்திலே அரச சேவைகள் துறையிலே மீண்டுமொரு முறை இரண்டாம் இடத்தைப்பெற்று பொதுச்சேவைகள் மற்றும் லொத்தர் உலகின் அரசனாக மீண்டும் உருவெடுத்துள்ளதென்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## கண்டல் தாவர நடுகை

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைமையில் செயற்படும் அனர்த்தப் பாதிப்பு குறைப்பு மற்றும் காலநிலை நிலைத்தன்மைத் திட்டத்தின்கீழ், அதன் யாழ்.பிராந்திய குழு மற்றும் காரைநகர் மீனவர் சமூகம் இணைந்து காரைநகர் பகுதியில் கண்டல் தாவர நடுகையையும் விழிப்புணர்வு செயற்பாட்டையும் நடத்தின.

நிகழ்வில் கண்டல் தாவரங்களின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அவற்றின் பங்களிப்பு, மற்றும் கடற்கரைத் தாழ்வுநிலங்களின் பாதுகாப்பு ஆகியவை தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டது. தொடர்ந்து கண்டல் தாவரங்கள் நடுகைசெய்யப்பட்டன. (சு–25, 20,159)

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 12 . 1945 | 29 . 07 . 2025 |



### அம்பலவாணர் கந்தசாமி
(AKB பாரவூர்தி உரிமையாளர்)

கோப்பாய் வடக்கு, நாவற்கட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கந்தசாமி அவர்கள் நேற்று (29.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும்,. நாகப்பர்-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகேஸ்வரி, இந்திராணி மற்றும் நவரட்ணம், சற்குணநாதன், செல்வரட்ணம், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் செல்வரஞ்சன் (தபால் ஊழியர் அஞ்சல் அலுவலகம்-கோப்பாய்), செல்வகுமாரன் (செல்வன் ஸ்ரோர்ஸ்), செல்வரஞ்சினி (ஆசிரியர் ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மல்லிகாதேவி, தேவகுமாரி, சிவசக்திவேல் ஆகியோரின் மாமனாரும், அபினா, சுருதினா, நிருஷிகா, வர்சிகன், யதுசர்சனா, அக்ஷயா, அக்ஷரன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 622 1090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய இழுவைப் படகுகளால் மீனவர்களின் வலைகள் அறுப்பு

## பருத்தித்துறைக் கடலில் தொடரும் அட்டூழியம்

வடமராட்சி, ஜூலை 30

**பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களால், யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன என்றும், பல வலைகள் காணாமற்போயுள்ளன என்றும் கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது என்று கடற்றொழிலாளர்கள் கூறுகின்றனர். இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளால்யாழ்.மாவட்ட மீனவர்களின் பல வலைகள் அறுக்கப்பட்டுள்ளதுடன், பல வலைகள் காணாமற்போயுள்ளன. இதனால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-100)

# பிரியந்த ஜயக்கொடி கைது

கொழும்பு, ஜூலை 30

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

திட்டமிட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான கெஹல்பத்தர பத்மே தம்மை அச்சுறுத்தினார் என்று பொய்யான முறைப்பாடு பதிவுசெய்தமை தொடர்பான குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)



# பருத்தித்துறையில் வடிகால்கள் தூர்வாரல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பருத்தித்துறை நகர்ப்பகுதியில் காணப்படும் வடிகால்கள் தூர்வாரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரில் காணப்படும் வடிகால்கள் நீண்ட காலமாகத் தூர்வாரப்படாது காணப்படும் நிலையில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் டக்ளஸ் போல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கோரிக்கை கடிதம் வழங்கி இந்தப் பணியை முன்னெடுத்துள்ளார். (ச-100)



# 5 புதிய தூதுவர்களுக்கு நியமனங்கள்

கொழும்பு, ஜூலை 30

5 புதிய தூதுவர்கள், ஓர் உயர்ஸ்தானிகர் மற்றும் ஓர் அமைச்சக செயலாளரின் நியமனங்களுக்கு கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயர் பதவிகளுக்கான குழுவின் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக சுமதுரிகா சசிகலா பிரேமவர்தன, பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவராக திருமதி சி.ஏ. சமிந்தா இனோகா கொலோன்னே, மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக முகமது ரிஸ்வி ஹாசன், துருக்கி நாட்டின் இலங்கைத் தூதுவராக கதுருகமுவ, நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவராக திருமதி ருவந்தி டெல்பிட்டிய, தென்கொரியாவுக்கான இலங்கைத் தூதுவராக மாரிமுத்து கே. பத்மநாதன், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தின் செயலாளராக ஆயிஷா ஜினசேனா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# ஜூலை மாதத்தின் கொடுப்பனவு

கொழும்பு, ஜூலை 30

ஜூலை மாதத்துக்கான அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களின் முதியோர் கொடுப்பனவு இன்று வங்கி கணக்குகளில் வைப்புச்செய்யப்படும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் நலன்புரி பயனாளிகள் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)




# களவும் கற்றுமற...!

கனவில கண்ட காசு செலவுக்கு உதவுமோ? எண்டு பழைய ஆக்கள் கேக்கிறவை. ஆனால் கனவில கண்ட காசை களவெடுத்தெண்டாலும் செலவழிக்கிற கூட்டம் பெருகிக் கொண்டே போகுது. ரிக்ரொக் லவ்வருக்கு நகையைக் களவெடுத்துக் குடுத்த காதலியைப் பற்றின செய்தியை வாசிச்சிருப்பியள். ரிப்போர்ட்டர்மார் செய்தியை உடன குடுக்கோணும் எண்ட அவசரத்தில சில தகவல்களை அதில குடுக்காமல் விட்டிட்டினம். அதோட சில திருத்தங்களும் அந்தச் செய்தியில இருக்கு. அதால என்ன நடந்ததெண்டு விலாவாரியா, சரியா பட்சி சொல்லத்தானே வேணும்.

சாவகச்சேரியில இருக்கிற அந்தப் பிள்ளை, ரிக்ரொக்குக்கு அடிமையான பிறகுதான் உந்த வில்லங்கமெல்லாம் வந்திருக்கு. ரிக்ரொக்கில இருக்கிற ஒரு பெடிப்பிள்ளைக்கும் இந்தப் பொம்பிளைப் பிள்ளைக்கும் ரிக்ரொக்கில பழக்கம் வந்து. அதில சட்டிங் எண்டு போய் , காதலாகி கசிந்து களவெடுக்கிற அளவுக்கு கொண்டந்து நிப்பாட்டியிருக்குது. அந்த ரிக்ரொக் காரன் விலாசம் காட்டுறதுக்காக, பெரிய மோட்டச்சைக்கிள் ஒண்டு வாங்கோணும் எண்டு இந்தப் பிள்ளையிட்ட சொல்லியிருக்கிறான். இவாவும் பேய்வெட்டிதானே, 'லவ்வர் கேட்டால் அதைச் செய்யாட்டி நான் காதலியா இருக்கிறதில என்ன பிரியோசனம்?' எண்டு நினைச்சிருக்கிறா. அந்தநேரத்தில வெளிநாட்டில இருந்து திரும்பவந்து தன்ர வீட்டில இருக்கிற ஒரு வயசான பொம்பிள்ளை, தனக்குத் துணைக்கு இந்த ரிக்ரொக் காதலியைக் கூப்பிட்டு தன்னோட வைச்சிருந்திருக்கிறா. ஒருவகையில அவாவுக்கு ரிக்ரொக் காதலி சொந்தம் எண்டதால, வீடு முழுக்க நம்பிப் புழங்க விட்டிருக்கிறா.

இதுதான் சான்ஸ் எண்டு நினைச்ச இந்தப்பிள்ளை, அப்பப்போ சின்னச் சின்ன நகையளை ஆட்டையைப் போட்டுக்கொண்டுபோய், தன்ர ரிக்ரொக் லவ்வரிட்ட 'இதை வித்துச் சேர்க்கிற காசில மோட்டர்சைக்கிள் வாங்கு' எண்டு குடுத்திருக்கிறா. அவனும் அதைவாங்கிக்கொண்டு 'இது பத்தாது இன்னும் கொண்டுவா' எண்டு தூண்டிவிட்டிருக்கிறான். அவாவும் அதுக்குப் பிறகும் ஒவ்வொரு நகையா எடுக்க, வீட்டுக்காரிக்கு டவுட் வரத் தொடங்கிட்டுது. 'இந்தப்பிள்ளைதான் நகையளை எடுக்குது' எண்டதைக் கண்டுபிடிச்சதால ' இனிவரவேண்டாம்' எண்டு அவா வெட்டு ஒண்டு துண்டு ரண்டாச் சொல்லியிருக்கிறா. அதுக்குப் பிறகு ரண்டுநாள் கழிய அந்தப் பிள்ளை அங்கபோயிருக்கு. 'என்ர உடுப்புகள் இஞ்ச இருக்கு., அதை எடுக்க வந்தனான்' எண்டு இந்தப் பிள்ளை சொல்ல, வீட்டுக்காரி 'நான் குளிச்சிட்டு வந்து எடுத்துத்தாறன்' எண்டிட்டுப்போய் குளிச்சிட்டு வந்து பார்த்தால், வந்த பிள்ளையைக் காணேலை. ஓடிப்போய் சாமியறைத்தட்டில பார்த்தால், அங்க வைச்சிருந்த தாலிக் கொடியையும் காணேலை. அவாவுக்கு விசயம் என்னெண்டு விளங்கினதால பொலிஸில முறைப்பாடு குடுத்திட்டா. அதுக்குப் பிறகுதான் அந்தப்பிள்ளை ரிக்ரொக் லவ்வருக்காகத்தான் இப்பிடிக் களவெடுத்திருக்கு எண்டு தெரியவந்திருக்கு.

இதில பகிடி என்னெண்டால், அந்த ரிக்ரொக் ல்வ்வர் இந்தப் பிள்ளையைவிட இன்னும் சில பொம்பிளைப்பிள்ளையளையும் லவ் பண்றாராம். இந்தப் பிள்ளை களவெடுத்துக் கொண்டந்து குடுத்த நகையள் சிலதை விக்காமல் தன்ர மற்றக்காதலியளுக்கு ப்ரசண்ட் பண்ணி, அவைக்கு இந்த ரிக்ரொக்காரன் ஐஸ் வைச்சிருக்கிறாராம். இப்ப இந்தக் கேஸில ரிக்ரொக்காரனோட சேர்த்து, அவனிட்ட நகையளைப் பரிசா வாங்கின மற்றக் காதலிமார் ரண்டுபேரையும் பொலிஸ் அரஸ்ட் பண்ணியிருக்குதாம். ஒராளுக்குத் தெரியாமல் மற்ற ஆளை காதலிச்சு பேய்க்காட்டிக்கொண்டிருந்த ரிக்ரொக்காரன், கையும் களவுமாப் பிடிபட்டதால, இப்ப அவரோட மூண்டு காதலிமாரும் பொலிஸ் ஸ்ரேசனில கடும் சண்டையாம். நகையைக் களவெடுக்கப் போய் கடைசியில ரிக்ரொக்காரனின்ர கள்ளக்காதலெல்லாம் இழவெடுத்தது தான் மிச்சம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட இனவழிப்புக்கு சர்வதேசமே நீதியைத் தருக

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு




**முல்லைத்தீவு, ஜூலை 30**

**இலங்கையில் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டுக்கொண்டும், அழிக்கப்பட்டுக்கொண்டுமிருக்கின்றனர். தமிழ் மக்கள் உள்ளக விசாரணைகள்மீது நம்பிக்கை இழந்துள்ளனர். கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு சர்வதேசம் தலையீடு செய்து முறையான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். தமிழ் இனவழிப்புக்கு பன்னாட்டு நீதிப்பொறிமுறையூடாக மாத்திரமே நீதி பெற்றுத்தரவேண்டுமென வலியுறுத்தி வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றபோது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப்பரப்பில் எங்கு பார்த்தாலும் மனிதப்புதைகுழிகள் இனங்காணப்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. பிஞ்சுக்குழந்தைகளின் எலும்புக்கூட்டுத்தொகுதிகள் கூட இனங்காணப்படுகின்றன. இதன்மூலம் கடந்த கால இனவாத அரசுகள் எவ்வாறான திட்டமிட்டவகையிலான மிகக் கொடூரமான தமிழ் இன அழிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதை நன்கு உணரக்கூடியதாகவிருக்கின்றது. இந்தப் புதைகுழிகளுக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

எனவே இந்தக் கொடூரமான திட்டமிட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு சர்வதேச விசாரணையூடாக நீதியைக் கோருகின்றோம்.

இந்த மனிதப் புதைகுழி விவகாரங்கள் சர்வதேச பொறிமுறையில் அகழ்வாய்வுசெய்யப்படுவதுடன், இந்த மனிதப் புதைகுழி விவகாரங்களுக்கு சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதே எமது தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு-என்றார். (ச-26,246)

**வீடுகள் வாடகைக்கு உண்டு**

வெள்ளவத்தை பம்பலப்பிட்டியில் A/C Room (நாள் - 3500/-). Normal Room (நாள் - 5500/-). நாள். கிழமை. மாத வாடகைக்கு உண்டு. A/C வீடுகளும். Normal வீடுகளும் வாடகைக்கு உண்டு. 3500 தொடக்கம் 15000/- வரை.

**077 717 8579**

## பொதுமுகாமையாளர் விண்ணப்ப காலநீடிப்பு

18.06.2025 ஆம் திகதிய பத்திரிகையின் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கான பொதுமுகாமையாளர் (101/06) ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 11.08.2025 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**
**வலிகாமம் பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்**
**கொத்தணி.** 30.07.2025

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1967



மறைவு 27 . 07 . 2025

## சசிகலா பவளலிங்கம்

மாவிட்டபுரம் வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சசிகலா பவளலிங்கம் அவர்கள் கடந்த (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வியும், பவளலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தையா, காலஞ்சென்ற முத்துமணி அவர்களின் அன்பு மருமகளும், அபியங்கா (தாதிய உத்தியோகத்தர் யாழ்/ போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சோபியா (வைத்தியர்), ஸியானுகா (மருத்துவ மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அர்யுன் (துர்க்கா மோட்டோஸ் உரிமையாளர், சுன்னாகம்) அவர்களின் பாசமிகு மாமியும், தேம்பாமலர், ஸ்ரீகாந்திதாசன், சுபோதினி, கேமமாலினி, கெங்காசுதன், கௌரிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மாவிட்டபுரம் வீதி,**
**கீரிமலை.**

(CS/58984) J-1

# மாதா சொருபம் உடைப்பு;
# சந்தேகநபர்களுக்கு தடுப்புக்காவல்

யாழ்., ஜூலை 30

மெலிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின் சொருபத்தை மதுபோதையில் உடைத்துச் சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 8 சந்தேக நபர்களையும் 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றின் நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

மெலிஞ்சிமுனை நாரயம்பதி மாதா சிலையை கடந்த 25ஆம் திகதியன்று 20 பேர் கொண்ட குழுவொன்று உடைத்துச் சேதப்படுத்தியதாக ஆலய நிர்வாகத்தினரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-20)

# மரண அறிவித்தல்



## திரு.தம்புசாமி சிவசுப்பிரமணியம்
**(முன்னாள் உரிமையாளர் - சீப்சைட், கிளிநொச்சி)**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஐந்து சந்தியை பிறப்பிடமாகவும். கொழும்பு. கொட்டாஞ்சேனை 6 வது ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திரு. தம்புசாமி சிவசுப்பிரமணியம் ( முன்னாள் உரிமையாளர் சீப்சைட். கிளிநொச்சி / பங்காளர் கொழும்பு சீப்சைட்) அவர்கள் **28.07.2025** திங்கட்கிழமை அன்று கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் க.பொ.தம்புசாமி (ஸ்தாபகர் சீப்சைட்) செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும். கொழும்பு கொட்டாஞ்சேனை. புதுச்செட்டித்தெருவை வதிவிடமாக கொண்ட காலஞ்சென்றவர்களான அப்பையா. செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும். காலஞ்சென்ற பத்மினிதேவி அவர்களின் அன்புக்கணவரும். பிரபாகரன் (UK) அவர்களின் பாசமிகு தந்தையும். கார்த்திகா (UK) அவர்களின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம். சிவநாதன். சறோஜினிதேவி (Canada). கணேசலிங்கம். கமலாதேவி (Canada). விமலாதேவி (UK). ரவீந்திரன். சகுந்தலாதேவி (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும். ஜெயகௌரி (UK). ரோகினி. காலஞ்சென்ற வாமதேவன். காலஞ்சென்ற கணேசராணி. கதிர்காமத்தம்பி (Canada). காலஞ்சென்றசிறிதரன். நளாயினி. மகேசன் (Canada), காலஞ்சென்ற தங்கராசா. சரோஜினி (Australia) காலஞ்சென்ற கமலாதேவி. பாக்கியநாதன் (Australia) காலஞ்சென்ற சிவசோதிலிங்கம். சகுந்தலாதேவி (Australia) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.07.2025 புதன்கிழமை இன்று காலை 8.30 மணி முதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மு.ப 11.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி, பி.ப 2.00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் (Gas) செய்யப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் : சி.பிரபாகரன் (மகன்) 0769091440**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சர்வதேசம் என்றால் தவிர்ப்பது ஏன்?

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடும் கண்காணிப்பும் அவசியம் என்று தமிழர்கள் தரப்பிலும், சர்வதேச ரீதியிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இலங்கையில் கடந்த காலங்களில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழிகளின் அகழ்வு நடவடிக்கைகளின் அனுபவமும், அந்த அகழ்வு நடவடிக்கைகளின் முடிவுகளும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் என்பதில் தமிழர்களும், ஏனைய தரப்புகளும் அழுத்தமாக நிற்பதற்குக் காரணமாக இருக்கின்றன. சர்வதேச ஜூரர்கள் சபையும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத்தின் கண்காணிப்புத் தேவை என்று வலியுறுத்தியிருக்கின்றது. அதற்குக் காரணமாக நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப் பொறிமுறைகள் கண்ட தோல்வியை சர்வதேச ஜூரர்கள் சபை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

கடந்த கால அரசாங்கங்களைப் போன்று தற்போதைய அரசாங்கமும் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத் தலையீட்டை - கண்காணிப்பை நிராகரித்திருக்கின்றது. செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் நீதியானமுறையில் செயற்படும் என்றும், செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் கூறும் அரசாங்கம், சர்வதேச தலையீடு - கண்காணிப்பு அவசியமில்லை என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு, பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. கடந்த காலங்களில் அரசாங்கங்களின் இவ்வாறான வாக்குறுதிகளும், அதன்பின்னர் அவற்றின் செயற்பாடுகளும் ஏற்படுத்தியிருக்கும் நம்பிக்கையீனமே இவ்வாறான சந்தேகங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் எழுவதற்கு முக்கியமான காரணிகள்.

செம்மணிப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கையில், அகழ்வு நடவடிக்கைகளை இழுத்தடிக்கும் செயற்பாடுகளே நடந்துகொண்டிருக்கின்றன.. நிதி முதற்கொண்டு, உபகரணங்கள் வரையில் ஆமை வேகத்திலேயே கிடைக்கின்றன. செம்மணி மனிதப் புதைகுழி இனங்காணப்பட்ட பிரதேசத்தில் அதிநவீன 'ஸ்கானர்' மூலம் தேடுதல் நடத்தத் திட்டமிட்டிருந்தபோதும் அதற்கான உபகரணங்கள் வந்துசேர்ந்துள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகப் பல நாள்கள் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இந்த விவகாரத்தில் விரைந்து செயற்பட்டிருக்கவேண்டிய அரசாங்கம், எதுவிதக் கரிசனையும் காட்டாதிருக்கின்றது. இவ்வாறிருக்கையில், அரசாங்கம் கூறும் வார்த்தைகளில் எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கைகொள்ளமுடியும்?

இலங்கையின் இறுதிப்போரில் நடந்த மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகவும், உள்நாட்டில் இனங்காணப்படும் மனிதப்புதைகுழிகள் தொடர்பாகவும் சர்வதேசத் தலையீடுகளைநிராகரிக்கும் உள்நாட்டுப் பொறிமுறை மீதான மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான நகர்வுகளை முன்னெடுப்பது அவசியம். உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் நீதி கிடைக்கும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு சிற்சில நடவடிக்கைகளை உருவாக்கவேண்டியதும் அரசாங்கமே. செம்மணி மனிதப்புதைகுழி போன்ற விடயங்களில் காட்டப்படும் கரிசனையும், உண்மைகளை வெளிக்கொணர்வதற்கான முயற்சியுமே பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கும். ஆனால் அவற்றைத் தவறவிட்டுவிட்டு, சர்வதேசத்தின் தலையீடு தேவை என்று கோருவோரைக் குற்றங்காண்பது ஏற்புடையதல்ல. இலங்கை பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று நீதியை நிலைநாட்ட முயலவேண்டும், இல்லாவிட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று சர்வதேசத்தின் தலையீட்டுக்கான - கண்காணிப்புக்கான வழியொன்றை ஏற்படுத்தவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை


பலிபீடத்தில் வெட்டப்படுபவை ஆடுகள்தான் சிங்கங்களல்ல. சிங்கங்களாக இருங்கள்.

– அம்பேத்கர் –



# மாகாணசபைத் தேர்தலை அரசு விரைந்து நடத்துக!

## பவ்ரல் வலியுறுத்து




கொழும்பு, ஜூலை 30

நீண்டகாலமாக நடத்தப்படாமலிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் பவ்ரல் வெளியிட்ட அறிக்கையில்,

மாகாணசபைகளின் ஆயுள்காலம் 2014 செப்டம்பருடன் நிறைவடைந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் பல காரணங்களுக்காக அரசாங்கங்கள் இதனை நடைமுறைப்படுத்தவில்லை.

பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் தேர்தலை நடத்துவதற்கான சட்ட நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்ட தாமதங்கள் மக்கள் மத்தியிலும் சிவில் சமூகத்தினர் மத்தியிலும் கரிசனையை ஏற்படுத்தியுள்ளன.

தேர்தலை ஒத்திவைப்பது பிற்போடுவது ஜனநாயகக் கொள்கைகளை சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்துவதாக அமையும். தேர்தல்களை நடத்தாமலிருப்பது அரசியலமைப்பு ஏற்பாடுகளை ஜனநாயக மரபுகளை மீறும் செயல், எனவே மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்தவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# கோப்பாயில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கோப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்தும் குருதிக் கொடைமுகாம் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.அச்சுவேலி மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதில் குருதிக்கொடையாளர்களைப் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# வாள்வெட்டில் குழந்தை உட்பட இருவர் காயம்

மட்டக்களப்பு, ஜூலை 30

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதியிலுள்ள வீடொன்றில் நடந்த வாள் வெட்டுச் சம்பவத்தில், பெண் ஒருவரும் அவரது ஒரு வயதுக் குழந்தையும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# நாமலுக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 30

நாமல் ராஜபக்சவுக்கு அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது. அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்றுதொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்தமையால் அவருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# பொதியிடப்பட்ட தே.எண்ணெயையே விற்பதற்கு இனிமேல் அனுமதி

கொழும்பு, ஜூலை 30

எதிர்காலத்தில் முறையாகப் பொதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயை மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்க முடிவுசெய்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொதிசெய்யப்படாத தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாகவந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறையை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அனைத்து பொதிசெய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்களும் SLS தர முத்திரை மற்றும் உரிய லேபிள்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை- ஆடி 14
31.07.2025
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அழகான தீவு இலக்கைக்கு முதலிடம்!

கொழும்பு, ஜுலை 30

உலகின் மிகவும் அழகான தீவுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகளாவிய பயண தளமொன்று, உலகில் மிகச் சிறந்த 50 தீவுகளைப் பட்டியலிட்டுள்ளது. வளமான கலாசார பாரம்பரியம், மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் அழகிய கடற்கரைகள் ஆகியவற்றைப் பிரதானப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விலேயே இலங்கை முதலிடத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனித்துவமான வன விலங்குகள், வனங்களுக்கு இடையில் அமைந்திருக்கும் பழங்கால ஆலயங்கள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள் மற்றும் துடிப்பான உள்நாட்டு வாழ்க்கை இவற்றுக்காகவும் இலங்கை உலகளவில் அதிகம் விரும்பப்படுகின்றது என்று ஆய்வை மேற்கொண்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அடுத்தடுத்த இடங்களில், மூரியா, பிரெஞ்சு பொலினீசியா, சோகோட்ரா, மடீரா, சீஷெல்ஸ், அச்சில், மிலோஸ் ஆகிய தீவுகள் உள்ளன. (ம)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை விற்பனை நிலையத்திற்கு நகை விற்பனையில் அனுபவம் உள்ள, பழக விரும்புவோர், ஆண் பணியாளர்கள் தேவை. யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
076 489 1539

(CR 45657) A

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக A+ இரத்தவகை கொண்ட சிறுநீரகம் தேவைப்படுகின்றது. உதவ விரும்புவோர் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

077 956 9813, 077 047 9341

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- வீரசிங்கம் செந்தூரன் |
| விண்ணப்பதாரர் பெயர் | :- திரு. வீரசிங்கம் செந்தூரன் |
| முகவரி | :- புகையிரத நிலைய வீதி, மல்லாகம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20. மல்லாகம் நிலாவரை வீதியில் ஆதன இல. 43/4 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "களைசிட்டியும் களைசிட்டி வளவும்" என்ற ஆதனம் K. கிருஸ்ணன் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கு.விசுவலிங்கம் முன்பாக இல 9290 திகதி 29.09.2021 நன்கொடை உறுதிப்படியும் பிரசித்த நொத்தாரிசு S. சன்முகலிங்கம் முன்பாக இல 5470 திகதி 16.02. 2017 அறுதி உறுதிப்படியும் விண்ணப்பதாரியான வீரசிங்கம் செந்தூரனுக்கு சொந்தமான இவ்வுறுதிகளில் சொல்லப்பட்ட ஆதனங்கள் இரண்டும், அருகருகே இருப்பதால் உறுதி இலக்கம் 9290 மற்றும் இல 5470 உறுதியில் உள்ள ஆதனங்களை ஒருங்கு சேர்த்து ஓர் ஆதனமாக 01.11.2021 ஆம்திகதிய பிரசித்த நொத்தாரிசு கு.விசுவலிங்கம் அவர்கள் முகதாவில் 9316 ஆம் இலக்க உறுதி மூலம் ஆதனத்தை ஒன்று சேர்ப்பதற்கான பிரகடனப்படுத்தல் உறுதி வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 5470ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசி இரஞ்ஜினி விஸ்வநாதன் முகதாவில் 30.01.2011ஆம் திகதிய 1266 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியின் ஆதனடாப்பில் கலைசுட்டிவளவு அல்லது கலைசிட்டிவளவு குழி பதினேழு தசம் ஏழு (17.7) இது 1989ம் ஆண்டு பங்குனி மாதம் 3ம் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் தி. அருமைநாயகம் அவர்களால் 3301ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டதுடன் குறித்த உறுதியில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனம் ஜெகதீஸ்வரி வேலாயுதம் என்பவர் தனது பெயரில் முடிந்த அறுதி உறுதிப்படி தனது சொந்தமும் நெடுங்கால பிசுகுதடையற்ற ஆட்சியுமாக இருக்கின்றபடியாலும் இக்காணியின் தெற்கெல்லையான தனக்கு சொந்தமாக இருந்து பின்னர் தனது மகளான குசலகுமாரன் பெண் ராதாவிற்கு சீதனமாக கொடுக்கப்பட்ட காணியில் கட்டப்பட்ட வீடு நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக முற்றாக எரிந்துவிட்டபடியாலும் குறித்த வீட்டிலிருந்த குறித்த ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனம் சம்பந்தமான உறுதிகள் முற்றாக எரிந்து விட்டதாகவும் குறித்த உறுதிகள் சம்பந்தமாக யாழ்ப்பாணக் காணிக் கந்தோரில் தேடியும் ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதாக 1266 ஆம் இலக்க உறுதியில் குறிப்பிட்டு இவ் வெளிப்படுத்தல் உறுதியினை முடித்துள்ளார். மேலும் 5470ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதியாக பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 09.02.2013 ஆம் திகதிய 5465 ஆம் இலக்க உறுதி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் விண்ணப்பதாரியினால் 09.02.2017ஆம்திகதிய 5465 ஆம் இலக்க உறுதியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 5465ம் இலக்க உறுதி யாழ்ப்பாணக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G80/90 இலக்க காணிப் பதிவுப் புத்தகத்தின் பிரதி இவ் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ் ஆதன வரிப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் கடந்த 30 வருட ஆதன உரித்து வரலாற்றினை நிச்சயப்படுத்த முடியாதுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை வலிவடக்கு பிரதேசசபை, பிரதேச செயலர் GS J/213 "களைசிட்டி" நிலப்பரப்பு (01) ஒன்று குழி ஒன்று + "களைசிட்டியும் களைசிட்டிவளவும்" குழி (16.23) பதினாறு தசம் இரண்டு மூன்று இவைகள் ஒருங்கு சேர்ந்து "களைசிட்டியும் களைசிட்டிவளவும்" என்ற நிலப்பரப்பு (01) ஒன்று குழி (16.23) பதினாறு தசம் இரண்டு மூன்று இது நிலஅளவையாளர் S. கஜேந்திரனின் நிலஅளவைப்பட இல 0291 திகதி 25.09.2021 படத்தில் முதலாம் துண்டாக காட்டப்பட்ட அளவுப்படி ஆட்சிப்படி நிலப்பரப்பு (02) இரண்டு குழி (216) இரண்டு தசம் ஒன்று ஆறு பட இல 0291 படத்தில் வடமேற்கு பக்கமாக காட்டப்பட்ட கிணறு தூர்வை என்பவற்றில் பங்கும் பாவிப்புரித்தும் வழமையான வழிவாய்க்கால் உரித்தும்

இதற்கு எல்லைகள்

| | |
|---|---|
| கிழக்கு | : ஒழுங்கை |
| வடக்கு | : வழிவாய்க்காலுக்குட்படுத்தப்பட்ட ஒழுங்கை |
| மேற்கு | : கணபதி கிருஷ்ணருக்கு உரிய ஆதனம் |
| தெற்கு | : விவேகானந்தன் பெண் சுபத்திராதேவிக்கும் தம்பிராசா மோகனசுந்தரத்துக்கும் மனைவி ரேணுகாவுக்கும் உரிய ஆதனம் |

மேற்குறித்த ஆதனத்தை வீரசிங்கம் செந்தூரன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் வீரசிங்கம் செந்தூரன் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோ.சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CR 37081) A

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 11 காரைதீவு வீதி. ஆதன இல 279 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பாக செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ் 22.01.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2483LD இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், 1960ம் ஆண்டிலிருந்து சொந்தமும் ஆட்சியுமானதாக இருந்து அவர்கள் காலமாகிவிட எமக்கடைந்த முதுசமும், எனது நீண்ட கால ஆட்சியுமானதாகும். இவ்வுரித்து தொடர்பில் எவ்வித பிசகு தடைகள் வராதென்றும் அவ்வாறு நேருமிடத்து நானே பொறுப்பாளி ஆவேன் என்றும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகிறேன்.

குறித்த ஆதனத்தை செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ் மறுநாமம் அமலதாஸன் 27.07.2014 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறீதரன் முகதாவில் 2134ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அமலதாஸன் பெண் யூடித் மெலானி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/85ம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "சுரிவெளிக்காடு" நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு)உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களால் 23.01.2004ம் திகதி அளந்து விபரித்த 2272ம் இலக்க படத்தின்படி

இதற்கு எல்லைகள்:-
கிழக்கு: காரைநகர் வீதி.
வடக்கு: முடிக்குரிய காணி.
மேற்கு: லாகனினாதனம்.
தெற்கு: ஜோர்ஜ் மரியதாசும் பெண் பிரான்சிஸ்க்கம்மாவின் ஆதனமும்.
இதடங்கலும்:


தற்போது இவ்வாதனத்தை அமலதாஸன் பெண் யூடித் மெலானி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அமலதாஸன் பெண் யூடித் மெலானி என்பவர் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

26 YEARS OF EXCELLENCE IN STUDENT PLACEMENT

உங்கள் வெளிநாட்டு கனவை நனவாக்கிக் கொள்ள
Edlocate உடன் இணைந்து கொள்ளுங்கள் !

STUDY
ABROAD DAY
IN JAFFNA



SCHOLARSHIPS FOR HIGH ACHIEVERS*

ENTRANCE FREE

*T&C APPLY

02ND AUG
09.30AM
04.30PM

UNIVERSITY OF JAFFNA
[ Arts Seminar Hall ]

Australia | New Zealand | Canada | England | Ireland

✔ PROCESS YOUR APPLICATION WITH US FOR 2026 INTAKES
✔ FOUNDATION | DIPLOMA | DEGREE | MASTERS | PHD

Follow Us On

edlocate
முற்பதிவுகளை மேற்கொள்ள: 077 222 3178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப்புதைகுழி கேட்டறிந்த சுவிஸ் தூதுவர்



யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்கு மாகாண ஆளுநருக்கும் இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்துத் தூதுவர் தலைமையிலான தூதரகக் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இலங்கைக்கான சுவிற்சர்லாந்துத் தூதுக்குழு கேட்டறிந்துகொண்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள சில கிராமங்கள் இன்னமும் பின் தங்கியுள்ள நிலையிலேயே உள்ளன எனவும், அங்கு வீதிக் கட்டுமானங்கள்கூட இல்லை எனவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டினார். அத்துடன் வடக்கு மாகாணத்தில் போரின் பின்னர் தொழிற்சாலைகள் போதுமானதாக இல்லாமையால் வேலைவாய்ப்பு சவாலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடி என்பனவற்றுக்கான வளம் சிறப்பாக உள்ளபோதும், மூலப்பொருள்களாகவே இங்கிருந்து ஏனைய இடங்களுக்கு அவை கொண்டு செல்லப்படுகின்றன எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் இங்கு பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றக்கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதன் ஊடாக இங்குள்ள உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

பலாலி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்தான விமான சேவைகள் தொடர்பிலும் சுவிற்சர்லாந்து தூதுவர் இந்தச் சந்திப்பின்போது கேட்டறிந்தார்.

இலங்கை முதலீட்டுச்சபையால் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அதன் உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, செம்மணிப் புதைகுழி விவகாரம், தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், மீள்குடியமர்வுச் செயற்பாடு, சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள், உள்ளூராட்சிமன்றங்களின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் தலைமையிலான தூதுக்குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர். மாகாணசபைத் தேர்தல், மாகாணசபை முறைமை தொடர்பாகவும் ஆளுநரிடம் தூதுக்குழுவினரால் கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த காலங்களில் மாகாணசபை முறைமையை பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ச-66)

# சங்கிலியன் பூங்காவில் சிறப்புற்ற பனை வாரக் கண்காட்சி



வடமாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இணைந்து 'எங்கள் வாழ்வியலில் பனை" என்ற தொனிப்பொருளில் நடத்திய பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 26ஆம் திகதி சனிக்கிழமைவரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் சிறப்புற இடம்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
01 . 03 . 1955



உதிர்வு
10 . 08 . 2024

அமரர்
## தம்பிப்பிள்ளை வரதராஜா (B.Ed)
( அதிபர் – The Express Institute )

தாயாகி எமக்கு பாசம் தந்து அணைத்தவரே !
தந்தைக்கு நிகராய் எம்மில் நேசம் பொழிந்தவரே !
இன்பம் நிறை வாழ்வை எம் நெஞ்சில் ஈந்தவரே !
ஈரம் சிந்தும் எம் விழிகள் உம்மைத் தேடுகின்றனவே !

உன்னதம் கல்வி என்று எமக்குரைத்தவரே
ஊதியம் கொண்டேகி உயர்ந்திட வைத்தவரே
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் திருவாய் மலர்ந்தீரே
எம்மைப் பிரிந்திட ஏனிந்த அவசரம் கொண்டீரோ?

ஏங்கிப் பதறி நெஞ்சுருகும் எமக்கு ஆறுதல் தாரீரோ ?
ஐயம் தீர்க்க வழியாகிய அஞ்சாத நெஞ்சத்தவரே
ஓராண்டும் மறைந்தது ஓர் ஆலயமாய் உறைந்தீரே
ஒரு முறை உங்கள் தரிசனம் காணத் தவிக்கின்றோமே !

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி……

(CS 58983)

30.07.2025

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதன் பொய்கை

30.07.2025
புதன்கிழமை


வெறும் பேச்சினால் நான் ஒருபோதும் எதையும் கற்றுக்கொள்ளவில்லை, கேள்விகளை கேட்கும்போது மட்டுமே விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்.

- லூ ஹோல்ட்ச்

# ஜூலைக் கலவரம்




## இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி

■ ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

### கோட்டை ரயில்நிலையத்தில் 9 தமிழர்கள் எரித்துக் கொலை

பதற்றம், அச்சம், தப்பியோட்டம், தஞ்சம், கொலை, கொள்ளை, வன்புணர்வு இதுதான் கொழும்பின்நிலை. முழு நாட்டினதும் நிலை. எங்கும் புகை மண்டலம். எரியும் வீடுகள், கடைகள். மரண ஓலம்தான் கொழும்பில் நிறைந்திருந்தது.

நிறையச் சம்பவங்கள். நிறையக் கொலைகள். களத்தில் காடையர்கள் மட்டுமே. அவற்றுள் ஒன்றுதான் புறக்கோட்டை ரயில் நிலையக் கொலைகள். 9 தமிழர்கள் அடித்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம். சொல்லிவிடமுடியா கொடூரம் அது.

எப்படி நடந்தது....???

அது ஒரு பகல் நேரம். சரியாக ஒரு மணி. அந்த ரயில் நிலையத்தில் கடும் பரபரப்பு. கொழும்பில் தாக்குதல் உக்கிரம். அங்கு இருக்கமுடியாது தப்பி ஓடுகிறார்கள் தமிழர்கள். அப்படியான ஒன்றுதான் இங்கும்.

தப்பி ஓடுவதற்காக குவிகிறார்கள் ரயில் நிலையத்தில். நிரம்பி வழிகிறது அந்த இடம். எல்லா இனமக்களும்தான் அங்கு. சற்றுநேரத்தில் கண்டியை நோக்கிய பயணம். கண்டியைத் தவிர வேறெங்கும் நிற்காது என அறிவிக்கப்படுகிறது அவ்வப்போது. முட்டி மோதுகிறார்கள் மக்கள். எல்லோர் முகங்களிலும் மரணபயம். இறுதி அறிவிப்பு. மெதுவாக வந்து நிற்கிறது ரயில். பெரும் நிம்மதி அவர்களுக்கு. ஓடிப்போய் ஏறுகிறார்கள். முட்டிமோதி நுழைகின்றனர். ஆனால், பயணிகளோடு பயணிகளாக முன்கூட்டியே நுழைந்துவிட்டார்கள் காடையர்கள்.

கொதிகொள்கிறது ரயில் நிலையம். உயிர்களைக் காப்பாற்றுவதற்காக பெரும் போராட்டம் அங்கு. அப்போது மேடையில் தயாராக ஒரு குழுவினர். காடையர்கள் குழு.

"எங்கடா புலி. ஒருத்தனையும் தப்பவிடக்கூடாது".

கத்திக்கொண்டு நுழைகிறார்கள் ரயிலுக்குள். நுழைந்த வேகத்தில் தாக்குதல். தமிழர்கள்மீது மரண அடி. 'எங்களைக் கொல்லாதீர்கள், நாங்கள் அப்பாவிகள்' என மன்றாடுகின்றனர் தமிழர்கள். எதையும் காடையர்கள் பொருட்படுத்துவதாக இல்லை. அவர்களின் கவனமெல்லாம் தமிழர்களைக் கொல்லவேண்டும் என்பதில்தான்.



நடக்கிறது வேட்டை. தமிழர்களின் தலைகளை இரும்புக் கம்பிகள் பதம்பார்க்கின்றன. சிவந்து போகிறது ரயில் மேடை. சுற்றிப் பெரும் கூட்டம். பயணிகள் கூட்டம் நூற்றுக்கணக்கில். எல்லோரும் பார்வையாளர்களாக. உதவிக்கு அழைத்தும் எவரும் வரவில்லை.

மெல்லமெல்ல உயிர்கள் பிரிகின்றன. ஒன்பது அப்பாவிகளின் உயிர்களும் ஒட்டுமொத்தமாகப் பிரிந்துவிட்டன. இழுத்துச் செல்கிறார்கள் அந்த உடல்களை. தூக்கிப்போடுகிறார்கள் ரயில் தண்டவாளத்தில். கடதாசிகளை அள்ளிப்போட்டு தீ வைக்கிறார்கள் அவற்றுக்கு. பற்றி எரிகின்றன உடல்கள். புகை மண்டலமாக கோட்டை ரயில் நிலையம். எவராலும் காப்பாற்ற முடியவில்லை. திட்டப்படியே நடக்கிறது எல்லாம். எங்கோ மறைந்திருந்துவிட்டு இப்போதுதான் வருகிறார்கள் இராணுவமும் பொலிஸாரும்.

மீண்டும் அறிவிப்பு. ஒலிபெருக்கி மூலம். "மூன்றாவது மேடையில் தரித்துநிற்கும் ரயில் இன்னும் சொற்ப வேளையில் கண்டி நோக்கிச் செல்லும்." அறிவிப்பைக் கேட்டு மீண்டும் ஓடிப்போய் ஏறுகிறார்கள் தமிழர்கள். கண்டி நோக்கி புறப்படுகிறது ரயில்.

ரயிலின் புகையும் சடலங்களின் புகையும் ஒன்றாய்க் கலக்க வேகமாய்க் கிளம்புகிறது ரயில். இராணுவத்தின் பாதுகாப்போடு. ரயிலின் ஒவ்வொரு கதவடியிலும் இராணுவம். எல்லாம் முடிந்த பின் பாதுகாப்பு.

சிறிது நேரத்தில் அங்கே தீ அணைப்புப் படை. அணைக்கிறார்கள் தீயை. மூன்றாவது மேடையில் இரத்தத்தைக் கழுவுகிறார்கள். அடுத்து அங்கே அம்பியூலன்ஸ். விறு விறுவென ஏற்றுகிறார்கள் சடலங்களை. சடாரெனப் பறந்துவிட்டது அந்த வாகனம். சம்பவம் ஒன்று நடந்ததற்கான அடையாளமே அங்கு இல்லை. பொலிஸும் வரவில்லை. விசாரணையும் நடத்தவில்லை. சம்பவம் நடந்தது பகல் ஒரு மணிக்கு. மாலை 6 மணிக்கு ஒரு செய்தி வானொலியில் வருகின்றது. எல்லாம் தலைகீழ்.

இன்று பகல் கண்டி நோக்கி புறப்படுவதற்குத் தயாராக இருந்த ரயில்மீது புலிகள் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த தாக்குதல் இராணுவத்தால் வெற்றிகரமாக முறியடிப்பு. அதில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது புலிகள் கொல்லப்பட்டனர்' என்றவாறாக அமைந்தது அந்தச் செய்தி. நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் நடந்த சம்பவம் அது. ஆனால், அரசு எதைச் சொல்கிறதோ அதுதான் உண்மை. அதுதான் ஜே.ஆரின் அரசு. இந்தக் கொலை ஒன்பது தமிழர்களின் கொலை அரசின் வேலைதான் என்பதற்கு இந்தச் செய்தி ஆதாரமாகும்.

இது மட்டுமா....இன்னும் இருக்கு...
பார்ப்போம் அடுத்த தொடரில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பெருவிழாக்களுக்குக் கட்டியம் செய்த

பா.குமுதன்





# வவுனியா மாவட்ட பண்பாட்டு விழா!



கலாசார விழாக்கள் ஒரு சமூகத்தின் அடையாளத்தையும், பாரம்பரிய மரபுகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்திச்செல்ல உதவுகின்றன. அவை, பண்பாட்டுப் பரிமாற்றத்தை ஊக்குவித்து சமூக நல்லிணக்கத்தைப் பேணுவதற்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. இத்தகைய விழாக்கள் ஒரு சமூகம் தங்களின் தனித்துவத்தை உலகுக்கு வெளிப்படுத்தவும் காரணமாக அமைகின்றன.

அந்தவகையில் பல்லின சமூகங்களின் கட்டமைப்புகளைக்கொண்ட வவுனியாப் பிரதேச செயலகம் ஒரு காத்திரமான முன்னுதாரணமாக, பிரமாண்டமான பண்பாட்டு நிகழ்வை அண்மையில் நடத்திமுடித்திருக்கின்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கலாசாரப் பேரவையும் இந்தப் பண்பாட்டு விழாவுக்குக் கூட்டிணைவான பங்களிப்பை வழங்கியுள்ளன.

வவுனியாப் பிரதேசசெயலாளர் இ.பிரதாபன் பண்பாட்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார். ஒவ்வொரு வருடமும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கலாசார விழாக்கள் நடாத்தப்படுகின்றன. அவை நிகழ்வினை நடத்திமுடிக்கவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே நடத்தப்படுகின்றமை அவதானிப்பு. ஆனால் இம்முறை இடம்பெற்ற வவுனியா பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா. இத்தகைய விழாக்களின் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளது.

### அணிசெய்த ஊர்திகள்


அந்தவகையில் அரங்குடன் மட்டுப்படுகின்ற வழமையான நிகழ்வுகளுக்கு அப்பால் இம்முறை பண்பாட்டு ஊர்திப் பவனிகள் வவுனியா நகரையே அலங்கரிக்கச் செய்திருந்தன. அது மக்கள் மத்தியில் நல்வரவேற்பையும் பெற்றிருந்தது.



பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் பறைசாற்றும் வகையில், கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட ஊர்திகள் நகரை வலம்வந்தன. ஒவ்வொரு ஊர்திகளும் பிரதேச மக்களின் பாரம்பரிய வாழ்வியலையும், இருப்பையும், அடையாளங்களையும் எடுத்தியம்பியன. அவை புதிய சந்ததிக்கு ஒரு உத்வேகத்தையும் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கான ஆரம்பப் பணிகள் பிரதேசசெயலாளர் தலைமையில் கலாசார உத்தியோகத்தரின் ஒத்துழைப்புடன், பல மாதங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்கும் நேரடியாகச் சென்று கலந்துரையாடி அந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னால் உழைத்த ஒவ்வொரு நபர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே.

### அற்புதமான அரங்க நிகழ்வுகள்

பண்பாட்டு ஊர்திப்பவனியை அடுத்து அரங்க நிகழ்வுகள் மாநகரசபை மண்டபத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் இடம்பெற்றன. அவை கலைகளின் சங்கமமாக பார்வையாளர்களுக்கு நல் விருந்தாக அமைந்தன. நிகழ்வின் சிறப்பம்சமாக வவுனியாப் பிரதேசத்தின் மொழி, கலை, பண்பாடு, இயல், இசை நாடகத்துறைகளில் பங்களிப்புச் செய்தவர்களிற்கான 'கலாநேத்ரா' விருது வழங்கிவைக்கபட்டது. அந்த வகையில் சந்திரசேகர் அனோஜன் (ஓவியம்), பாஸ்கரன் கதீஷன் (ஊடகத்துறை), நாகராஜா செந்தூர்ச்செல்வன் (பரதம்), அல்போன்ஸ் மெலிஸ்ரன் (நாடகம்), செல்வரத்திணம் சண்முகரத்தினம் (இயல்), சுந்தரம் சிவயோகராஜா (கட்டுரை), சிவராசா நாகராசா (அறிவிப்பு), வல்லிபுரம் கந்தப்பு (மெல்லிசை), சேனாதிராசா சந்திரகாந்தன் (வாத்திய இசை), மாசிலாமணி தர்மகுலசிங்கம் (வாத்திய இசை) ஆகிய கலைஞர்கள் விருதினைப் பெற்றனர். நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத் சந்திர, வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களுடன் பெருமளவான உள்ளூர் கலைஞர்களது பங்கெடுப்பு நிகழ்வை மேலும் மெருகூட்டியது. நிகழ்வுகளை பிரதேச கலாசார உத்தியோகத்தர் க.அபிராமி, மற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.துஜான் ஆகியோர் செம்மையாக்கி ஒழுங்கமைத்திருந்தனர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாலைப் பாதுகாப்பில் சறுக்கல்கள் வேண்டாம்

மருத்துவர் பா.சயந்தன்
*குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்*
*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*மருத்துவபீடம் யாழ்ப்பாணம்*



நாட்டில் நடைபெறும் பெரும்பாலான வீதி விபத்துகள் சிறிய ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும்போது, சாரதிகள் இருபுறமும் சரிவர அவதானிக்காமல் பிரதான வீதிக்குள் நுழைவதன் மூலமே ஏற்படுகின்றன. இது மிகவும் ஆபத்தான ஒரு விடயமாகும்.

வாகன விபத்துக்கான காரணிகள்

1. சாரதிகள் வீதியை இருபுறமும் பார்க்காமல், வீதி வாகன நெரிசலற்றுக் காணப்படுவதாக அனுமானிக்கின்றார்கள்.
2. சிறிய ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும்போது அவர்கள் வாகனத்தை நிறுத்தி இருபக்கமும் கவனித்துவிட்டுச்செல்லவேண்டும். அவ்வாறல்லாமல் நேரடியாக பிரதான வீதியினுள் வேகமாக நுழைகின்றார்கள்.
3. வீதிவிபத்துகளைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகளைப் பின்பற்றாமல் இருப்பதுடன், வாகனங்களின் வருகை இல்லை என்று தாமாகவே அனுமானித்துக் கொள்கின்றனர்.

**பொதுவான விதிமுறைகள்**

1. பிரதான வீதியில் செல்பவர்களுக்கே சட்டரீதியான முன்னுரிமை உள்ளது என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும். பிரதான வீதிக்குள் நுழைவதற்கு முன்னர் நிறுத்தி அவதானித்துச் செல்லுங்கள்
2. எப்போதும் நீங்கள் பிரதான வீதிக்குள் நுழையும்போதும் கவனிக்கவேண்டிய விடயங்கள்

- சிறிய ஒழுங்கைகளின் முடிவில் வாகனங்களை நிறுத்துங்கள்
- இருபுறமும் கவனமாக அவதானியுங்கள் (வலது பக்கம், இடது பக்கம், மீண்டும் வலது பக்கம்)
- பிரதான வீதியினூடு சென்றுகொண்டிருக்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை அளித்து உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.
- வீதி வெறுமையாகக் காணப்படுகின்றது என நினைத்து வீதிக்குள் நுழையவேண்டாம்.
- இடதுபக்கம், வலது பக்கம் நுழையும்போது வாகன குறிகாட்டிகளை சரியாகப் பயன்படுத்துங்கள்.

**வீதி விதிமுறைகள்**

1. இரவில் உங்கள் வாகன முகப்பு விளக்கின் வெளிச்சமானது வேகமாகச் செல்லும் வாகனங்களின் வெளிச்சத்தை மறைக்கமுடியும். எனவே இரவுவேளைகளில் வீதியானது வாகன நெரிச்சலற்று வெறுமையாகக் காணப்படுகின்றது என்பதை ஊகிக்கவேண்டாம்.
2. வாகன நெரிசலற்ற வெறுமையான வீதியிலும் திடீரென்று வேறு வாகனமானது கூடிய வேகத்துடன் பிரதான வீதியில் வரமுடியும். இதனால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.
3. இருளான வீதிகளில் பார்வை புலன் குறைவாகக் காணப்பட வாய்ப்புகள் காணப்படுவதால் அதிக நேரம் நிறுத்தி அவதானித்து பின் செல்லவும்.
4. பழக்கப்பட்ட வீதியாகக் காணப்படினும் புதிய வீதியாகக் காணப்படினும் நீங்கள் அந்த வீதியை நன்றாக அறிந்திருந்தபோதிலும் அந்த வீதியில் செல்லும் ஏனைய சாரதிகள் உங்களது சடுதியான நுழைவை எதிர்பார்க்க மாட்டார்கள். எனவே மெதுவாகச் செல்லுங்கள்.

**முச்சக்கர வண்டி செலுத்துவோர், மோட்டார் சைக்கிள் செலுத்துவோர், சைக்கிள் செலுத்துவோர் கவனிக்க வேண்டியவை**

ஒரு கணத்தின் கவனக்குறைவால் வாழ்க்கையே தடுமாறலாம்...
நீங்கள்தான் மிகவும் அபாயத்தில் இருப்போர்! என்பதை மறக்கவேண்டாம்.
ஒரு நொடி தவறு கூட, ஒரு பெரும் உயிராபத்துக்குக் காரணமாகலாம்.
அதற்காகவே, ஒவ்வொரு முறையும் நிறுத்துங்கள் - இருபுறமும் பாருங்கள் - பின்னர் செல்லுங்கள்.
இது பகலாக இருந்தாலும் சரி, இரவாக இருந்தாலும் சரி, சாலை வெறிச்சோடிருந்தாலும் சரி, நெரிசலாக இருந்தாலும் சரி விதியை மாற்றமுடியாது!
இரண்டு நொடிகளுக்கான அவதானத்தின் மூலம், வாழ்க்கை முழுவதற்குமான வருத்தத்தைத் தவிர்க்கலாம். சாலை வெறிச்சோடி இருந்தாலும் சரி, வேறு வாகனங்கள் போகவில்லை என்றாலும் சரி நிறுத்துங்கள். பாருங்கள். வாழுங்கள்.
சாலை பாதுகாப்பு என்பது பொலிஸாரின் அபராதங்களுக்காக அல்ல உங்கள் குடும்பத்தையும், உங்களது அயலவரையும், உங்களையும் பாதுகாக்கவே.

## மாட்டுவண்டிச் சவாரி





தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான மாபெரும் வண்டில் சவாரிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் அமைந்துள்ள தமிழ் முற்றம் சவாரி திடலில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம், மன்னார் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து பலர் பங்கேற்றனர். வெற்றி ஈட்டிய காளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை






கலாநிதி சுஜீதா ஜெகஜீவன்




கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடத்தியிருந்தன. இதில் பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களில் மிக முக்கியமாக பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களைத் தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது. இது 5 கட்டுரைகளைக் கொண்டிருக்குமென்பதுடன் இந்த முதலாவது கட்டுரை அதன் ஆரம்ப அமர்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கையின் ஜனாதிபதி மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின் சிரேஷ்ட துணை முகாமைத்துவப் பணிப்பாளர் போன்றோரினால் ஆற்றப்பட்ட உரைகளில் எடுத்தியம்பப்பட்ட முக்கியமான விடயங்களை தொகுத்து வழங்குகின்றது.

### நாணயநிதியத்தின் நிதி வசதி

2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார நெருக்கடி நிலைமைகளைத் தொடர்ந்து, இலங்கை சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. பல்வேறு பூர்வாங்கத் தேவைப்பாடுகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் புதிய நிதிய வசதிக்கான அனுமதி சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்டது. இது இலங்கைக்கான 17ஆவது நிதி வசதியாக அமைந்ததுடன் மொத்தமாக ஏறத்தாழ 3 பில்லியன் டொலர் தொகை கொண்ட நான்கு வருட காலப்பகுதிக்கான கடன் வசதியாகும். சர்வதேச நாணயநிதியத்தின் கடன் வசதியானது வெறுமனே நிதியை வழங்குவது மாத்திரமன்றி நாட்டின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தேவைப்படுகின்ற சீர்திருத்தங்களைத் தேவைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டமாக அமைகின்றது. உலகளாவிய ரீதியாக அங்கத்துவ நாடுகள் தாம் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது நேரகாலத்துடன் சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவினை நாடுவது வழக்கம். இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டம் தொடங்கி இரண்டு வருடங்கள் முடிவடைந்ததன் பின்னர் மிக முக்கியமான ஒரு கட்டத்தில் நாடு தற்பொழுதுள்ள நிலையில் ஜூன் மாத மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

### பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையின் மீட்சியும் சீரமைப்பும்

மாநாட்டின் ஆரம்பத்தில் கடந்த மூன்று ஆண்டுகளின் முன்னர் நாடு எதிர்நோக்கிய மிக மோசமான பொருளாதார நிலைமையும் அதற்கான முக்கியமான காரணங்களும் சுருக்கமாகக் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பான விரிவான கலந்துரையாடல் மாநாட்டின் தனியானதொரு அமர்வில் இடம்பெற்றதுடன் அது தொடர்பான விடயங்கள் அடுத்த கட்டுரையில் விரிவாக ஆராயப்படும். இலங்கை கடந்த காலங்களில் பல தடவைகள் சென்மதி நிலுவை நெருக்கடி, அதாவது வெளிநாட்டுச் செலாவணிக்கான நெருக்கடி தொடர்பான பிரச்சினைக்கு முகங்கொடுத்திருந்த போதிலும் அதனுடன் இணைந்து பொதுப் படுகடன் நெருக்கடி நிலைமைக்கு உட்பட்டமை இதுவே முதற் தடவையாக அமைந்தது. இதன் காரணமாக இதிலிருந்து மீட்சியடைவதற்கான முயற்சிகளும் சீர்திருத்தங்களும் கடந்த காலங்களை விட கடுமையாக அமைந்தன. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்காக மேற்கொள்ளப்பட்டதீவிரமான கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களினால் பொருளாதார மீட்சி அடையப்பட்டுள்ளது. இவ்வாறு அடையப்பட்ட பொருளாதார உறுதிப்பாடானது ஒரு முடிவல்லவென்றும் இது எதிர்காலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் மீண்டெழும்தன்மையை கட்டியெழுப்புவதற்கும் அத்திவாரமாக அமையவேண்டுமெனவும் மத்திய வங்கியின் ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமானதும் நீண்டகாலத்தில் பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் நன்மையளிக்கக்கூடியதுமான சீர்திருத்தங்களாக மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும், பொது நிதியின் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காகவும் அதேபோன்று ஊழலினை ஒழிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான சட்ட மூலங்கள் இயற்றப்பட்டமை கலாநிதி கோபிநாத்தினாலும் மத்திய வங்கியின் ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்கவாலும் குறிப்பிடப்பட்டன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டமை விரைவானதாகவும் ஏனைய நாடுகளின் அனுபவங்களுடன் ஒப்பிடுமிடத்து தனித்திருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட துணை முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் குறிப்பிட்டதுடன் இதற்கு அரசாங்கம் உட்பட அனைத்து ஆர்வலர்களின் பங்களிப்பையும் பொதுமக்களின் தியாகங்களையும் அவர் பாராட்டினார்.

### கடன் மறுசீரமைப்புச் செயன்முறையில் இலங்கை எதிர்கொண்ட சவால்கள்

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுகின்ற செய்முறையில் இன்றியமையாததும் கடினமானதுமாகக் காணப்பட்டதொரு விடயம் இலங்கையானது தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் மீள்செலுத்தலை தற்காலிமாக இடைநிறுத்தியதும் கடன்மறுசீரமைப்பினை முன்னெடுத்ததுமாகும். இது தொடர்பாக பல்வேறு மாற்றுக் கருத்துகள் இன்னமும் காணப்படுகின்ற போதிலும் நிலைபெறாததன்மை கொண்ட பொதுக் கடன் நிலையிலிருந்து விரைவாக மீண்டுவருவதற்கு இலங்கைக்கு வேறு மாற்று வழிகள் இருந்திருக்கவில்லை. இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செய்முறை பல சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ளதுடன் இந்த அனுபவமானது இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் அதையொத்த படிப்பினையாக மாறியுள்ளது. அந்தவகையில் பின்வரும் மூன்று சவால்கள் முக்கியமாக அமைகின்றன.

#### (1) போதுமான அளவிற்கு கடன் நிவாரணத்தை வழங்கக்கூடியவாறு கடன் இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டியமை

இந்த முயற்சியில் கடன்வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம் மற்றும் உள்நாட்டுக் கொள்கைச் சீராக்கங்கள் இரண்டையும் உள்ளடக்க வேண்டியிருந்தமையும் கடன் நிலைபேறானதன்மை மீள் அடையப்படவேண்டியிருந்தமையும் ஒரு கடினமான விடயமாகவிருந்தது. இதன்படி கடன்வழங்குநரின் ஒத்துழைப்புடன் கடன் மறுசீரமைப்பினூடாக கணிசமானளவு நிவாரணம் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. அடுத்துவரும் தசாப்தத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுக் கடன் பணிக் கொடுப்பனவு அரைவாசியாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு கடனானது 27 வீதத்தாலும், பொதுக்கடன் இருப்பு 34 வீதத்தாலும் குறைக்கப்பட்டிருக்கின்றது.

#### (2) சிக்கல்வாய்ந்த வெளிநாட்டுக் கடன்வழங்குநர்களின் தொகுப்பு


தாழ்ந்த வருவாய் கொண்ட நாடுகளின் கடன் மறுசீரமைப்பிற்கு பரிஸ் கிளப் அமைப்பினூடாக ஏற்கனவே நன்கு பரிசோதிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு முறையொன்று காணப்படுகின்றது. ஆனால், இலங்கை போன்ற நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு இவ்வாறானதொரு அமைப்பு காணப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கையின் கடன் கடன்மறுசீரமைப்பிற்காக பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் தலைமையில் அலுவல்சார் கடன் வழங்குநர்களின் குழுவொன்று உருவாக்கப்பட்டதுடன், சீனா அலுவல்சாரா அடிப்படையில் இந்தக் குழுவுடன் இணைந்து செயற்பட்டது. இருந்தபோதிலும் கடன்மறுசீரமைப்பிற்காக தேவைப்படும் தகவல்களை வேறுபட்ட கடன்கொடுநர்கள் குழுக்களிடையில் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தீர்வின் ஒப்பீட்டுத்தன்மை பற்றி கடன்வழங்குநர்களிடையே காணப்பட்ட கரிசனைகள் தொடர்ந்தும் சவால் மிக்கதாகவேயிருந்தன.

#### (3) கடன்மறுசீரமைப்பிலிருந்து எழக்கூடிய நிதியியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவைப்பாடு

இலங்கையின் கடனில் உள்நாட்டின் கடனின் பங்கு அதிகமாகவிருந்தமையினால் வெளிநாட்டுக் கடனின் மறுசீரமைப்பு மாத்திரம் கடன் நிலைபேறானதன்மையை மீட்டெடுப்பதில் போதுமானதாக இருக்கவில்லை. அது மாத்திரமின்றி உள்நாட்டுக் கடனின் பெரும் பகுதி உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள், பொது ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் மத்திய வங்கியின் வசமிருந்தன. எனவே, பெரியளவிலான நிதியியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவும் சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும் கடன்பெறுமதியில் குறைப்பினை ஏற்படுத்தாமல் வட்டி வீதங்களைக் குறைப்பதிலும் முதிர்ச்சிக் காலத்தை நீடிப்பதிலும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் கவனஞ்செலுத்தப்பட்டது. இவ்வாறான பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் இந்தச் சிக்கலான கடன் மறுசீரமைப்புச் செய்முறையானது எதிர்வரும் காலத்தில் ஏனைய பல நாடுகளின் கடன்மறுசீரமைப்பை இலகுபடுத்துவதற்கு வழிசெய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பெண் நோர்வேயில் சாவு

யாழ்., ஜூலை 30
யாழ்ப்பாணம் வடமராட்சி பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் நோர்வே நாட்டில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்த நிலையிலேயே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலதிக விசாரணைகளை நோர்வே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66)

### சட்டச்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 10 மாத காலப்பகுதியில் 3 தேர்தல்களை நடத்தி முடித்துள்ளோம். உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை சிறந்த முறையில் நடத்தினோம். தற்போது உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகள் நிறுவப்பட்டுள்ளன.
மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாணசபைகள் இயங்குவது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்கின்றோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் நாங்களும் உடன்படுகின்றோம். எனினும், மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா? அல்லது புதிய தேர்தல் முறையிலா நடத்துவது? என்பதில் சட்டச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்தச் சட்டச் சிக்கல்களுக்கு இன்னமும் காத்திரமான தீர்வெதையும் கண்டுகொள்ளவில்லை.
மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்ற சட்டச்சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாண முடியும். தேர்தல் முறையைத் தீர்மானித்தால் தேர்தலை நடத்தத் தயாராகவே உள்ளோம். தேர்தல்முறைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பு அரசியற் கட்சிகளுக்கும் உள்ளது - என்றார். (அ-ம-இ)

### நல்லூர்...

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பித்தது. திருவிழாவை முன்னிட்டு, ஆலய வளாகத்துக்குள் நுழையும் பாதைகளில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனினும், அந்தத் தடைகளைக் கருத்திற்கொள்ளாமல் திடீரென இராணுவ வாகனமொன்று நுழைந்துள்ளது.
நல்லூர் திருவிழா காலத்தில் குறித்த பகுதியில் நல்லூர் ஆலய வளாகத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வாகனத்தைத் தவிர வேறு எந்த வாகனத்துக்கும் உள்ளே செல்வதற்கு அனுமதி இல்லை. அத்துடன் பாதணிகளுடன் செல்வதற்கும் அனுமதி இல்லை. இவ்வாறிருக்கையில் இராணுவத்தினின் வாகனம் உள்நுழைந்தமை பக்தர்களிடையே சஞ்சலத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.
கடந்த வருட திருவிழாவின்போது பௌத்த பிக்கு ஒருவர் வாகனத்தில் நல்லூர் வளாகத்துக்குள் நுழைய முற்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### கட்டுடையில்...

பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரைப் பின் தொடர்ந்து ஓட்டோவில் வந்த மூவர், அவரைத் தள்ளி விழுத்திவிட்டு வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். சந்தேகநபர்கள் தப்பிச்சென்ற நிலையில், பாதிக்கப்பட்ட நபர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

### ஒருவருடம்...

மல்லாவியில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
பொதுமக்களும், பொது அமைப்பினரும் ஒன்றிணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டத்தைத் தொடர்ந்து, மல்லாவி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மல்லாவி பொலிஸ் நிலையம்வரை பேரணியும் முன்னெடுக்கப்பட்டது. பேரணியைத் தொடர்ந்து, ஆனந்தராசன் சஜீவனின் இறப்புக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பொலிஸாரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.
இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டார். 'எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவேண்டும். இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடனும் கலந்துரையாடப்படும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் பொலிஸாரிடம் தெரிவித்தார். (அ-ம-35)

### 'ரிக்ரொக்'...

குறித்த இளைஞர் மற்றும் இந்தத் திருட்டுக்கு உடந்தையாக இருந்த இன்னொரு பெண் ஆகிய மூவரையும் எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சந்தேகநபர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில், நகைகளைத் திருடிய யுவதியையும், அவருடைய காதலனையும், இந்தத் திருட்டுக்கு உடந்தையாகச் செயற்பட்ட இன்னொரு யுவதியையும் எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். ஏனைய நால்வரும் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (அ-ம-20)

### ஐயவர்த்தனபுர...

களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு பாதுகாப்பு அமைச்சு இன்னமும் அனுமதி வழங்கவில்லை.
பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பதற்குத் தாமதப்படுவதால், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடாகப் பெற்றுப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேரகாலத்துடன் ஸ்கானர் கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் பணிகள் முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20)

### செம்மணி...

டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 24ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே 7 என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன், மூன்று என்புத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து இதுவரை 111 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதுவரை 99 என்புத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### சுவிட்சர்லாந்து...

புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளின் 24ஆம் நாளான நேற்றையதினம், சம்பவ இடத்துக்கு வந்த தூதுவர் சிறிவோல்ட் தலைமையிலான குழுவினர் புதைகுழியைப் பார்வையிட்டதுடன், பணிகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர். (அ-ம-26)

### கோப்பாயில்...

உள்ளானதில் ஏழு பேர் காயமடைந்தனர்.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தனியார் பேருந்தில் பயணித்த ஆறு பேர் காயமடைந்த நிலையில், சொகுசுக் காரில் பயணித்த நபரொருவருக்கு கால் முறிவு ஏற்பட்டுள்ளது.
சொகுசுக்கார் தனது வழித்தடத்தை விட்டு விலகி, எதிர்முனை வாகனங்கள் பயணிக்கும் பகுதிக்குள் சென்றமையால் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26)

### மணியந்...

ஏற்பட்டுள்ளது. வைரமுத்து சாந்தலிங்கம் (வயது-54) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலமாக மீட்கப்பட்டவருடன் வசித்துவந்த 56 வயதுடைய சகோதரியின் வாக்குமூலத்தைப் பெற்றனர்.
இதன்போது, 'இரவுவேளையில் மூவர் வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்டனர். அவர்களுக்குத் தண்ணீர் எடுப்பதற்காக உள்ளே சென்றபோது, பின்தொடர்ந்து வந்த அவர்கள் என்னைக் கட்டிப்போட்டுவிட்டு நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். அதிகாலை 3 மணியளவில் நான் கட்டுகளை ஒருவாறாக அவிழ்த்துவிட்டு வெளியே வந்து பார்த்தபோது தம்பி சடலமாகக் காணப்பட்டார்' என்று அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.
இந்த வாக்குமூலத்தில் திருப்தியடையாத பொலிஸார், சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து, உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்த னர். இதன்போது, அந்த நபர் கொல்லப்படவில்லை என்றும், மாரடைப்பாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்றும் தெரியவந்தது.
இந்த விடயங்கள் தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவரின் சகோதரியின் (வாக்குமூலம் வழங்கியவரின்) உளநலம் தொடர்பில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

### நீர்வேலியில்...

எய்தியுள்ளார். நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதியைச் சேர்ந்த தம்பையா நல்லம்மா என்ற மூதாட்டியே நோய் நொடிகள் ஏதுமின்றி வாழ்ந்துவந்த நிலையில் தனது 103 வயதில் உயிரிழந்துள்ளார். இவர் 1922ஆம் ஆண்டு பிறந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பெருந்திருவிழா புற ஏற்பாட்டு நடைமுறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

**நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா புற ஏற்பாடுகள் தொடர்பான ஆரம்பகட்டக் கலந்துரையாடல் மாநகர முதல்வர் திருமதி வி. மதிவதனி தலைமையில் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் திருவிழா புற ஏற்பாடுகள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.**

அதன்படி

01. ஆலயச்சூழலில் வீதிப்போக்குவரத்து நடவடிக்கைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் எதிர்வரும் ஓகட்ஸ் 28 ஆம் திகதி நள்ளிரவு வரை ஆலய வெளிவீதியின் ஊடான போக்குவரத்து கள் முற்றாகத் தடைசெய்யப் பட்டிருக்கும்.

02.வீதித்தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகரசபைக்கு முன்புறம், அரசடிச்சந்தி, கோயில்வீதியில் சங்கிலியன் வீதிச்சந்தி, பிராமணக் கட்டுக்குளச்சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகளுக்கேற்ப மேற்படி வீதித் தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

03.நல்லூர் வருடாந்தத் திருவிழா நிகழ்வின்போது மாற்றுவீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறைவீதி வழியாக வரும் வாகனங்கள் நல்லூர் குறுக்குவீதியால் பயணித்து நாவலர் வீதியின் ஊடாக ஆனைப் பந்திச்சந்தியை அடைந்து யாழ். நகரை அடையமுடியும். யாழ். நகரிலிருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதையூடாக பருத்தித்துறை வீதியை அடையமுடியும். விசேட திருவிழாக்களின்போது முத்திரைச் சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதியின் ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்கமுடியும்.

கோயில் வீதியால் வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியின் ஊடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கை ஊடாக வரும் வாகனங்கள் நல்லூர் குறுக்கு வீதியின் ஊடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும் பயணிக்கமுடியும்.

04. ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக உழவு இயந்திர மற்றும் வாகனத்தில் வருகின்ற தூக்குக் காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்புற பருத்தித்துறை வீதி வழியினூடாக மட்டுமே உள்நுழையமுடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் பருத்தித்துறை வீதி ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலுக்கு முன் இறக்கப்பட்டதும் தூக்குக்காவடி வாகனங்கள் அனைத்தும் செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறமுடியும்.

05. உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

06. ஆலயச் வெளிவீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

07.உற்சவ காலங்களில் ஆலய வெளிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

08.உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்திக் கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்.

09.உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. 10.உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ட்ரோன் (Drone) கமரா பறக்கவிட்டு காணொளி பதிவுசெய்தல், வானூர்தியைப் பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வானவேடிக்கை நிகழ்வுகளை செய்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் பெருந்திருவிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-26)



# மரக்காலைக்குள் புகுந்த மருத்துவரின் கார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மருத்துவர் ஒருவர் செலுத்தி வந்த கார் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியருகே காணப்பட்ட மரக்காலை ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது. வீதிச்சமிக்ஞையில் சிவப்பு நிறம் போடப்படுவதற்குள் வேகமாக வந்து திரும்பியபோதே கட்டுப்பாட்டை இழந்து கார் மரக்காலைக்குள் புகுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது காரின் சாரதியும் மரக்காலையில் பணியாற்றியவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

**வேலையாட்கள் தேவை**

- கூலி ஆட்கள்
- விற்பனை உதவியாளர் (Sales man)
- மரவேலை (வார்னிஸ்)

**077 254 3569**

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 12 . 1952



மறைவு
27 . 07 . 2025

## அமரர் கணபதிப்பிள்ளை கதிராசி

கப்புதுவைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிராசி அவர்கள் கடந்த (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், சாம்பசிவம், தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவராசா பரமேஸ்வரியின் உடன் பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, செல்லையா, பார்வதி, சுப்ரமணியம், மற்றும் பொன்னம்மா, காலஞ்சென்ற சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கீதா (இலண்டன்), ஹரிகரன் (உரிமையாளர், ஹரிஷ் உணவகம், நெல்லியடி), கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரந்தாமன் (இலண்டன்), நிறஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமியும், சுவாஹந்தா (இலண்டன்), காவ்யன் (இலண்டன்), ரித்விகா ஆகியோரின் அன்பு நிறைந்த பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று தகனத்திற்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கணேஸ் அறிவாலய வீதி,
கரவெட்டி வடக்கு, நெல்லியடி.

தகவல் :
குடும்பத்தினர்
0777574752

# அநாகரிகக் கடிதத்துக்கு மன்னிப்புக்கோருங்கள்

## யாழ்.கமநலத் திணைக்கள அலுவலர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடனான கடிதம் ஒன்றுக்குக் கண்டனம் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உத்தியோகத்தர்கள் சம்பள உயர்வு, இடமாற்றம்கோரி கடிதம் அனுப்பியிருந்தநிலையில், இலங்கை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சங்கம், தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி கடிதமொன்று அனுப்பியுள்ளது என்று குறிப்பிட் டுள்ள உத்தியோகத்தர்கள், அந்தக் கடிதத்தை மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சலுகைகள் அனைத்து உத்தியோகத்தவர்களுக்கும் சமனானவையே, பெண் உத்தியோகத்தர் என்பதால் இழிவாக எண்ணாதீர்கள், தொடர்புடைய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும், திணைக்களத் தலைவரையும், உத்தியோகத்தர்களையும் அவமதிக்காதீர், இலங்கை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சங்கம் மன்னிப்புக் கோரவேண்டும் போன்ற வசனங்கள் தாங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.